யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 205 ஆங்கிரச ஆனி 05 (19.06.1992) வெள்ளி


## விழிசிட்டியில் இராணுவம் கட்டி வைத்த வயோதிபர்

அண்மையில் தெல்லிப்பழை விழிசிட்டிப் பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது இராசரத்தினம் (பூசாரி) என்ற வயோதிபர் இராணுவத்திடம் சிக்கி விட்டார். இராணுவத்தினர் இவரை மரத்துடன் கட்டி வைத்து விட்டுச் சென்று விட்டனர். பின் இவர் கட்டுக்களை அவிழ்த்து விட்டு வீட்டிலிருந்து சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இப்பகுதியிலிருந்து இராணுவம் வாபஸானதைக் கூட இவர் அறியவில்லை நேற்று முன்தினம் இவரது உறவினர்களும் சென்று அழைத்த போது இவர் இராணுவத்தினர் தான்

—04 ஆம் பக்கம் பார்க்க

# வலி. மேற்குப் பகுதி நோக்கி அதிகாலை கடும் ஷெல்தாக்கு

## 10 பொதுமக்கள்வரையில் காயம்

நேற்றுக்காலை 5: 45 மணிமுதல் 6. 15 மணிவரை பலாலி இராணுவ முகாமிலிருந்து வலிகாமம் மேற்குப்பகுதி நோக்கி பரவலான ஷெல் தாக்குதல் பொதுமக்கள் குடியிருப்புகளை நோக்கி நடத்தப்பட்டது. இச்சம்பவத்தில் சுமார் 10 பொதுமக்கள் வரையில் காயமடைந்துள்ளனர்.

தெல்லிப்பழை இளவாலை போயிட்டி மாதகல் சுழிபுரம் மூளாய் பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. சுழிபுரத்தில் வீழ்ந்த ஒரு ஷெல்லினால் சில கால்நடைகள் பலியாகின. திடீரென நடத்தப்பட்ட தாக்குதலினால் பொதுமக்கள் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துகொண்டனர்.

(07-50-22)

## இரத்தம் தேவை

யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் தற்போது இரத்தம் பற்றாக்குறை யேற்பட்டுள்ளதனால் தற்போதைய நிலையில் இரத்தம் வழங்க முன்வருபவர்கள் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளும்படி இரத்த வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

07

## இளவாலையில் ஹெலி சூடு

நேற்று மாலை 3 30 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று இளவாலை, சித்திரமேழி பகுதிகளை நோக்கி பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றித் தெரியவில்லை.

22

★ விடுதலைப்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்

## பதுக்கலுக்கு எதிராக காவல்துறை நடவடிக்கை எடுக்கும்

போராட்டச் சூழ்நிலையில் பொதுமக்களை மேலும் துன்பப்படுத்தும் நடவடிக்கையில் வர்த்தகர்களும் எரிபொருள் விற்பனையாளர்களும் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது இக்குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்கள் மீது தமிழீழக் காவல்துறை கடும் நடவடிக்கைகள் எடுக்கும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பிரிவுப் பொறுப்பாளர் இளம்பரிதி விடுத்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களும் வீண் வதந்திகளை நம்பி பொருள்களை கூடுதலாகச் சேமிக்கும் நோக்கில் அலைந்து திரிந்து கொள்ளை இலாபமீட்டும் வர்த்தகர்களுக்கு பலியாக வேண்டாம் எனவும் பொதுமக்களைக் கோரியுள்ளார்.

## மண்ணெண்ணெய் மீண்டும் நேற்று விற்பனைக்கு

நேற்று முன்தினம் திடீரென மாயமாய் மறைந்த மண்ணெண்ணெய் மீண்டும் நேற்று வீதிகளுக்கு வந்ததை காணமுடிந்தது.

சில இடங்களில் வர்த்தகர்களும் பல நோ. கூ. சங்கங்களும் ஒரு லீற்றர், இரண்டு லீற்றர் என்ற அளவில் பொதுமக்களுக்கு விற்பனை செய்ததையும் காணமுடிந்தது.

இதே வேளை நேற்று மாலை முத்திரைச் சந்தையில் ஒரு லீற்றர் 25 ரூபாவுக்கு விற்கப்பட்டது.

(47, 06, 15, 07)

★ பிரதி சபாநாயகர் காமினி கண்டனம்

## இப்போதைய நாட்டு நிலைக்கு இரு கட்சிகளுமே பொறுப்பு

இப்போதைய நிலைமைக்கு நாட்டை மாறி மாறி ஆட்சி செய்துவந்த சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியுமே பொறுப்பேற்கவேண்டும் என பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பொன்சேகா, இந்தியா புலிகளை தடைசெய்தது போன்று இலங்கையிலும் தடைசெய்ய வேண்டும் என்று யாராவது கோரினால் அது அவர்களது மனச்சாட்சியின்படி தெரிவிக்கப்படும் கூற்று அல்ல எனக் குறிப்பிட்டார்.

## பாதுகாப்பு வலயத்தினுள் ஷெல துண்டுகள் என புகார்

நேற்றுக் காலை யாழ் நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட படையினரின் ஷெல் தாக்குதலின் போது சில ஷெல் துண்டுகள் பாதுகாப்பு வலயத்தினுள் வீழ்ந்துள்ளன.

இச்சம்பவம் குறித்து இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறையிட்டுள்ளது

06

## யாழ். மாவட்ட ஊரடங்கு

நேற்றுக் காலை 6 மணிமுதல் யாழ்ப்பாணமாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று தெரிவித்தது.

## வவுனியாவில் தாக்குதல் 2 ஊர்காவற் படையினர் பலி

வவுனியா 9 ஆம் யூனிட் பகுதியில் நேற்று புலிகள் நடத்திய தாக்குதலில் 2 ஊர்காவற் படையினர் பலியாகினர்

நேற்று காலை 9 ஆம் யூனிட் பகுதியிலிருந்து இராணுவத்தினரும் ஊர்காவற் படையினரும் ரோந்து வந்த போது புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

கொல்லப்பட்ட ஊர்காவற் படையிடமிருந்து 303 துப்பாக்கியும் ரவை கூடும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## வலி. மேற்கில் காயமடைந்த பொதுமக்கள் விவரம்

நேற்றுக்காலை பலாலிமுகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் காயமடைந்த பொதுமக்கள்

சுழிபுரம் கல்லவேம்படியில் விழ்ந்த ஷெல்லில் ஆ சங்கரப்பிள்ளை (65) செல்வி ஜெயரஞ்சி சபாரட்ணம் (17)

பண்டத்தரிப்பு பனிப்புலத்தில் விழ்ந்த ஷெல்லினால் கே சின்னையா (70), திருமதி ஆர். தனேஸ்வரி (30) உரும்பிராய்

மூளாய் பிள்ளையார்கோவிலடியில் விழ்ந்த ஷெல்லினால் அனுஷியா 33) மாதகலில் விழ்ந்த ஷெல்லினால் எஸ். வீரவாகு (55) ஆகியோர் காயமடைந்தனர்

07

## கொழும்பில் மின் துண்டிப்பு

கொழும்பில் அண்மையில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தினால் இன்னமும் பல பகுதிகள் மின் விநியோகம் இன்றி உள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

## கடற்படை தாக்குதல்

கீரிமலை, சேந்தாங்குளம் மாதகல் கடற்பகுதியில் இருந்து கடற்படையினர் நேற்று காலை பீரங்கி தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது

(47, 22, 07)

# மண்டைதீவுப்படையினர் அதிகாலை யாழ் நகரை நோக்கி ஷெல் தாக்கு

நேற்றுக்காலை 6 மணியளவில் மண்டைதீவிலிருந்து திடீரென யாழ்நகரை நோக்கி படையினர் மூர்க்கத்தனமான ஷெல் தாக்குதலை நடத்தினர்

அரைமணி நேரம் நீடித்த இத்தாக்குதலின் போதஷெல்கள் கே. கே. எஸ் வீதியில் மையிலன்கட்டிடம், முதலாம் இரண்டாம் குறுக்கு வீதிகள், கொட்டடி, வண்ணை, கோம்பையன் மணல்மயானம், நாச்சிமார் கோவிலடி, உடையார் ஒழுங்கை சிவப்பிரகாசம்வீதியில் உள்ள வீடியோ புளோசம் கிளைவனம் மீதும் வீழ்ந்து வெடித்தன

தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை அதிகாலையில் நடந்த இத் திடீர் தாக்குதலினால் பொதுமக்கள் பதற்றமடைந்தனர் கரையோரப்பகுதிகளில் வசித்தவர்கள் பாதுகாப்பு வலயத்தை நாடி ஓடினர்

25 22 19 15 47 07 06

## வீரச்சாவு

மண்டைதீவிலிருந்து நேற்று நடைபெற்ற ஷெல் தாக்குதலில் பெண்போராளி சந்தியா (யோகேஸ்வரி தேசிங்கம் கரவெட்டி) வீரச்சாவு அடைந்தார்.

# பள்ளேகல தடுப்பு முகாமிலிருந்து
# ஜே. வி. பி. கைதிகள் தப்பியோட்டம்!

ஜே.வி.பி. சந்தேகநபர்கள் வைக்கப்பட்டிருக்கும் பள்ளேகல தடுப்பு முகாமிலிருந்து பல கைதிகள் தப்பியோடியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை இச் சம்பவம் நடந்துள்ளது.

இச் சம்பவத்தின் போது மூன்று கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஏனையவர்களைத் தேடி பொலிசாரும் படையினரும் கூட்டாகத் தேடுதல் வேட்டையினை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜே. வி. பி சந்தேக நபர்கள் வைக்கப்பட்டிருக்கும் மற்றொரு தடுப்பு முகாமான பூஸா முகாமிலிருந்து சில நாட்களுக்கு முன்னர் கைதிகள் தப்பியோட முயன்றமையும், இம் முயற்சி தோல்வியுற்றதையடுத்து முகாமைத் தாக்கவென அங்கு கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு உள்ளூர் ஆயுதங்கள் மீட்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவங்களையடுத்து தென்னிலங்கையில் ஜே. வி. பி சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கலைமகள் வெற்றி பெற்றது

அரியாலை சாந்தி ச. ச. நிலைய விளையாட்டுக் கழகமும், அரியாலை ஸ்ரீ கலைமகள் ச. ச நிலைய விளையாட்டுக் கழகமும் கலந்து கொண்ட 7 ஆவது வட்ட ஒருநாள் சுற்றுப்போட்டியில் ஸ்ரீ கலைமகள் அணியினர் சாந்தி அணியினரை ஒரு இன்னிங்ஸாலும், 79 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றனர். (25

## அகதிகள் தஞ்சமடைந்ததால் சில பாடசாலைகள் மூடப்பட்டன

வலி வடக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையினால் அப்பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

உடுவில், சுன்னாகம் பகுதிகளிலேயே மக்கள் தஞ்சமடைந்துள்ளதால் பல பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. ஏற்கனவே இடம் பெயர்ந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இயங்கி வந்த காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரி இயங்கிய கட்டிடம் முழுவதும் அகதிகள் தங்கியுள்ளனர். அக்கல்லூரியும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், முருகமூர்த்தி மகா வித்தியாலயம் என்பவும் அகதிகள் தங்கியுள்ள பாடசாலைகளாகும். 20

## கொழும்பு மினிபஸ் ஊழியர்க்கு முதலமைச்சர் எச்சரிக்கை!

கொழும்பில் தனியார் பஸ் ஊழியர்கள் தமது பகிஷ்கரிப்பை தொடர்ந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் காலிவீதியிலும் கொழும்பின் சுற்றுப் பகுதியிலும் பஸ்சேவைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த ஊழியர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டு உடனடியாக சேவைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும் தவறின் அவர்களின் பஸ் சேவை பாதை அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்படுமெனவும் மேல் மாகாணசபை முதலமைச்சர் எச்சரித்துள்ளார்.

## மட்டுநகரில் எதிரணியினர்

எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் இம்மாதம் 27 ஆம் திகதி மட்டுநகருக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்கள் மட்டு அரசாங்க செயலகத்தில் இடம்பெறும் மகாநாட்டிலும் பங்கு பற்றுவர்.

## ஐயனார் கோவில் மகோற்சவம்

சண்டிலிப்பாய் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் கோவில் இம்முறை மகோற்சவம் நடைபெறவுள்ளது. 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இவ்வுற்சவத்தில் 29 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். முத்தமிழ் குருமணி. நா. சர்வேஸ்வரக்குருக்கள் பிரதம குருக்களாக கிரியைகளை நடாத்திவைப்பார். தினமும் இரவு 7 மணிக்கு தொடர் விரிவுரை இடம்பெறும். 37

## ரி. வி. யில் சபை நிகழ்ச்சிகள்

பங்களா தேஷில் பாராளுமன்ற நிகழ்ச்சிகளை அந்நாட்டு தொலைக்காட்சி நிறுவனம் ஒளிபரப்புச் செய்ய ஆரம்பித்துள்ளது.

## தமிழ்த்தின போட்டி

வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்தினப் போட்டி இம்மாதம் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

## ஞானவைரவர் பொங்கல்

வண்ணை சிவப்பிரகாசம் வீதியில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலயத்தில் இன்று பி. ப 2. 30 மணிக்கு வருடாந்த பொங்கல் உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

## சேந்தாங்குளம் பகுதியில் எதிரிக்குப் பலத்த அடி!

**- இளம்பரிதி**

"சேந்தாங்குளம் பகுதியில் ஸ்ரீலங்கா அரசு 2500 க்கும் மேற்பட்ட படையினரைக் கவசத்தாங்கிகள், பீரங்கிகள் சகிதம் முன்னேற முயன்ற வேளை எமது வீரர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள். அப்போது எமது தரப்பில் 3 போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். 20 போராளிகள் காயமுற்றனர். ஆனால் இராணுவத்திற்குப் பேரிழப்பு ஏற்பட்டது. போராளிகளின் தாக்குதல் எதிரிக்குப் பேரடியாக அமைந்தது.

மேற்கண்டவாறு அரியாலை கணேசன் தோட்டம் சாம்சன் குடியேற்றத்திட்ட விளையாட்டு மைதானத்தில் மாவீரர்களின் நினைவாக இடம்பெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் "நாம் மாவீரர்களை ஒவ்வொரு கணமும் நினைத்துச் சிந்திப்பதன் மூலம் வாழ்வை நெறிப்படுத்திக்கொள்ளலாம். எமது போராளிகள் உறுதியோடு களத்தில் நிற்கிறார்கள்" என்றும் சொன்னார்.

விடுதலைப்புலிகள் மாவீரர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, தீவக அரசியற் பொறுப்பாளர் சேதுநாதன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுடாபி மாஸ்ரர் ஆகியோரும் இங்கு பேசினர். (47)

## கப்பல் சேவை ஆரம்பமானதும் தொழிலாளர் திருப்பி அனுப்பப்படுவர்

தலைமன்னார் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதும் இந்தியா திரும்ப உள்ள இந்திய பாஸ்போர்ட் பெற்ற இந்திய வம்சாவளித் தொழிலாளர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுவர்.

பிரதமர் டி. பி. விஜேதுங்க பாராளுமன்றத்தில் இதனை அறிவித்தார்.

நிலைமை சீரானதன் பின்னரேயே கப்பல் சேவை மீள ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## வடபகுதி யுவதியிடம் புறக்கோட்டையில் வழிப்பறி

புறக்கோட்டையில் வைத்து வடபகுதி யுவதி ஒருவரிடமிருந்து 20 ஆயிரம் ரூபா பணம் வழிப்பறி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்றுக் காலை நிகழ்ந்துள்ளது.

இந்த யுவதி புறக்கோட்டை மீன் சந்தைப் பகுதியால் சென்றுகொண்டிருக்கையில், இனந்தெரியாத நபரொருவர் அவரிடமிருந்த 20 ஆயிரம் ரூபா பணத்தை பறித்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பஸ்சேவை முறைகளில் பாரிய மாற்றம் வரும்

கொழும்பில் பஸ்சேவை முறைகளில் பாரிய மாற்றஞ் செய்யப் போவதாக மேல்மாகாண முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

பஸ் பயணிகளுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே இம் மாற்றங்கள் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## அனைத்துக் கட்சிக் குழு இன்று மன்னாருக்கு விஜயம்

அனைத்துக் கட்சி உறுப்பினர்களைக் கொண்டகுழுவொன்று இன்று மன்னாருக்கு விஜயஞ் செய்யவுள்ளது.

கற்பிட்டியிலிருந்து கப்பல் மூலம் மன்னார் செல்லும் இக்குழுவினர் மன்னாரில் மூன்று தினங்கள் தங்கியிருப்பர்.

மன்னார் செயலகத்தில் நடைபெறவுள்ள மகாநாட்டிலும் இக் குழுவினர் பங்குபற்றவுள்ளனர்

## சுங்க அதிகாரிகள் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

சுங்கத்திணைக்கள அதிகாரிகள் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

ஜூன் 30ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்களை அனுப்ப முடியுமென தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

மே இரண்டாம் திகதி வெளியான வர்த்தமானியில் இது குறித்த மேலதிக விபரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

விண்ணப்ப இறுதித் திகதி ஜூன் 19 என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

## சேந்தாங்குளம் பகுதிகளில் பெருமளவு கண்ணிவெடிகளாம்

சேந்தாங்குளம் பகுதியில் ஏராளமான கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் சேனக டி சில்வா[?] கொழும்பில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

செய்தியாளர் மகாநாட்டில் பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


## பதவி வெற்றிடங்கள்

பிரபலமான நிறுவனம் ஒன்றினால் பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. உதவிக் கணக்காளர்
2. உதவிக் கணக்காய்வாளர்
3. கணக்கு லிகிதர்
4. காசாளர்
5. உதவிக் களஞ்சியப் பொறுப்பாளர்
6. தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளர்

**1. உதவிக்கணக்காளர் 2. உதவிக்கணக்காய்வாளர் தகமைகள்**

அ. (I. C A - INTERMEDIATE) பட்டயக் கணக்காளர் (நடுப்பகுதி)

ஆ. (I. C M. A - PARTS 1 TO 3) பட்டயக் கணக்காளர் பகுதி 1-3

இ. (B.COM) வர்த்தகமாணி பட்டதாரி

**3- கணக்கு லிகிதர் - தகமைகள்**

க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது 3 வர்த்தக பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**4. காசாளர் - தகமைகள்**

க. பொ. த (சாதாரணதரம்)- எண்கணிதம்/கணக்கியலில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் பிணைப் பணம் கட்ட வேண்டும்.

**5. உதவிக் களஞ்சியப் பொறுப்பாளர் தகமைகள்**

க. பொ. த (சாதாரணதரம்)- எண்கணிதம்/ கணக்கியலில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**6. தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளர் - தகமைகள்**

க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் தமிழ் விசேட சித்தி. அங்கீகரிக்கப்பட்ட சுருக்கெழுத்து/தட்டெழுத்து பரீட்சையில் சித்தி.

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்போர் குறைந்தபட்சம் 3 வருட தொழில் அனுபவம் கொண்டவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்கள்.

விளம்பர இலக்கம் 307
பே / பா முரசொலி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்,

என்ற முகவரிக்கு நேரிலோ அன்றி தபால் மூலமோ 25. 06. 92 க்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

06044

மாநகர ... நூலகம் யாழ்ப்பாணம்

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இடைஞ்சலாக இருக்கும் இராணுவம்

இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாகவும் இதன் காரணமாக அடுத்த தேர்தலில் தாம் தோல்வி கண்டாலும் அதைப்பற்றிக் கவலைப்படப்போவதில்லை என்றும், சிக்கலான தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைத்த திருப்தியுடன் பதவியை விட்டு விலகத் தான் தயார் என்றும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸ கூறியதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியாகியது.

"எத்தனை சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் விடுதலைப் புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடரும்" என சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன கூறியதாக அதே ஞாயிற்றுக்கிழமை இன்னுமொரு பக்கத்தில் செய்தி வெளிவந்தது.

இந்த இரண்டு கூற்றுக்களும் ஜனநாயக அரசுக்கும், இராணுவத் தளபதிக்கும் இடையேயுள்ள முரண்பாடுகளையும், இடைவெளியையும் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

அதே ஞாயிற்றுக்கிழமைப் பத்திரிகை ஒன்றில் "ஈழத்தை அழிக்க வேண்டுமானால் ஈழம் என்ற எண்ணக் கருத்தையே அழிக்க வேண்டும்" என இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன கூறியதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

தமிழீழம் என்ற எண்ணக் கருத்தை அழிக்கவே வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் மணலாறு பிரதேசத்தை இராணுவப் பிரசன்னங்கள் மூலமும் சிங்கள குடியேற்றங்கள் மூலமும் சிங்களப் பிரதேசமாக்கும் முயற்சியில் இராணுவத்தினர் இறங்கியுள்ளனர்.

வடக்கும், கிழக்கும் இணைந்த தமிழீழத்தை அழிப்பதற்கு அதன் இணைப்பை அழித்து விட்டால் தமிழீழ எண்ணக் கருத்தே அழிந்து விடும் என்பது இராணுவத் தளபதியின் கருத்துப் போலும்.

இந்தக் கூற்று வெளி வந்ததற்கு அடுத்த நாள் திங்கட்கிழமை வடக்கு - கிழக்கு இணைப்பைத் தமது அரசு நிராகரிப்பதாகத் தம்மைச் சந்தித்த தமிழ்க் குழுக்களிடம் ஜனாதிபதி பிரேமதாஸ கூறியுள்ளார் என இந்திய வானொலி அறிவித்தது. அரசு பாராளுமன்றத் தெரிவுக் குழு முடிவில் தான் தங்கியுள்ளதாக இன்னும் நம்பப்படுகின்றது.

இந்த நிகழ்வுகள் சிறிலங்கா அரச விவகாரங்களில் இராணுவத்தின் கைகளும், கருத்துக்களும் மேலோங்கி நிற்பதையே காட்டுகின்றன.

**எஸ். ஜி. எம்.**

1990 ஜூன் மாதத்தில் விடுதலைப் புலிகள் - சிறிலங்கா இராணுவ மோதல்கள் ஆரம்பித்ததிலிருந்து வடக்கு, கிழக்கை "சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட" பல கால நீடிப்புக்களைக் கேட்டுப் பெற்று அரசாங்கத்தைச் சங்கடப்படுத்தியதும் இந்த இராணுவம்தான்.

இந்த நிலை இப்போது மட்டுமல்ல ஜெயவர்த்தன காலத்திலும் இருந்தது என்பதை ஜனாதிபதி ஜெயவர்த்தனவே கூறியுள்ளார்.

1990 ஜூனில் பிரபல பத்திரிகையாளர் மேர்வின் டி சில்வாவுக்கு அவர் வழங்கிய பேட்டியின் ஒரு பகுதி கீழ் வருமாறு அமைகிறது.

மே.டி.சி.: சில விடுதலைப் புலிகள் சரணடைய உடன்படிக்கை கொண்டதால் (இலங்கை இந்திய) ஒப்பந்தம் மூன்று மாதங்களின் பின்பு அக்டோபர் 1987 இல் முறிந்தது?

ஜே.ஆர்.: ஆம். ஆனால் அது ஒரு சாட்டு மட்டுமே.

மே.டி.சி.: கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் விசாரணையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு தாம் தங்களிடம் மன்றாடிக் கேட்டதாக டிக்ஷித் என்னிடம் கூறியுள்ளார். அதற்காக உங்களது விசாரணையாளர்களை அவர்கள் (விடுதலைப்புலிகள்) வைக்கப்பட்டிருந்த இடத்துக்குக் கொண்டு செல்ல இந்திய விமானப் படை விமானமொன்றை ஏற்பாடு செய்யவும் ஆயத்தமாக இருந்ததாக அவர் கூறியுள்ளார்.

ஜே.ஆர்.: நான் எனது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு செவிசாய்க்க வேண்டியிருந்தது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் இக் கூற்று மிகவும் முக்கியமானது. அமைச்சரவை மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றின் அங்கீகாரமின்றி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையே துணிச்சலுடன் ஏற்படுத்திய அவரே பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பணியவேண்டிய நிலை அப்போதே இருந்திருப்பது தெளிவாகிறது.

எனவே சிறிலங்காவின் அரசியல் விவகாரங்களில் இராணுவத்தின் ஆதிக்கம் கணிசமான அளவு ஏற்பட்டுள்ளதைக் கவனிக்க முடிகிறது. இது ஒரு ஜனநாயக நாட்டுக்கு நீண்டகால அடிப்படையில் நலமானதல்ல. பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா, பிலிப்பைன்ஸ் எனப் பல நாடுகளில் இராணுவத் தலையீடுகள் ஏற்படுத்திய தாக்கத்தை அனுபவமாகக் கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகள் மட்டுமல்ல சிறிலங்கா ஆயுதப் படையினரும் இடைஞ்சலாகவே உள்ளனர் என்பது இப்பொழுது வெளிப்படையாகியுள்ளது.

# அடுத்தமாதம் முதலாம் திகதி வரை தடுப்புக் காவல் நீடிப்பு!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 26 பேரையும் தொடர்ந்தும் அடுத்தமாதம் முதலாம் திகதிவரை தடுத்து வைத்திருக்குமாறு தனி நீதிமன்றத்தின் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ராஜீவ் காந்தி கொலைவழக்கு விசாரணைகள் இரகசியமாக இடம்பெற்றபோது, குற்றவாளிகள் 26 பேருக்கும் தனித்தனியாக குற்றப்பத்திரிகைகளின் நகல்கள் கையளிக்கப்பட்டதாக சென்னைச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

# தெரிவுக்குழு நடவடிக்கைகளில் பங்குபற்ற ஜனாதிபதி பணிப்பு

இனப்பிரச்சினைத் தீர்வு தெரிவுக்குழு நடவடிக்கைகளில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தவறாது பங்குபற்ற வேண்டுமென ஜனாதிபதியினால் பணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கொழும்பில் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அடுத்த மாதகாலத்திற்குள் தீர்வு காண ஜனாதிபதி ஆர்வம் கொண்டுள்ளார். இதனாலேயே ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு இப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# 'ஊட்டச்சத்து அதிகம் பெற நிலக்கடலை, மரவள்ளி சிறந்தவை'

"சோறுமை மாவுக்குப் பதிலாக மரவள்ளி கிழங்கையும், நிலக்கடலையையும் சேர்த்துப் பயன்படுத்துவதன் மூலம் நிறைவான ஊட்டச்சத்தைப் பெறலாம். மேலும் இவை இரண்டையுஞ் சேர்ப்பதனால் மிகுதியான புரதம், கொழுப்பு, கல்சியம் போன்ற சத்துக்களைப் பெறலாம். கச்சான் தற்சமயம் எமது பகுதியில் நிறைய உற்பத்தி செய்யப்படுவதால் சோறுமை மாவுக்காகத் தமிழர் கப்பலை எதிர்நோக்கவேண்டிய தேவை இல்லை."

வைத்திய கலாநிதி முருகானந்தம் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் உரையாற்றுகையில் இந்த ஆலோசனையைத் தெரிவித்தார்.

# இந்தியாவின் கோரிக்கையை இலங்கை ஆராய்கிறது!

இலங்கையின் நாடுகடத்தல் நடைமுறைகள் பற்றி இந்திய சட்ட நிபுணர்கள் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பவிருப்பதாக இந்திய அரசு விடுத்த கோரிக்கை பற்றி இலங்கை அரசு ஆராய்ந்து வருகிறது என ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்ட வல்லுநர்கள் கொழும்பு வர இலங்கை அரசு அனுமதித்துள்ளதென இந்தியச் செய்தி நிறுவனங்கள் முன்னர் வெளியிட்ட செய்தி தவறானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒவ்வொரு பாடசாலைக்கும் ஜனாதிபதி 1000 ரூபா வழங்குவார்

பாடசாலை அபிவிருத்திச் சபைகளை அமைக்கும் பணி துரிதமாக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திச் சபைகளை அமைப்பதன் மூலம் அபிவிருத்தி நிதியங்களும் ஏற்படுத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலையினதும் அபிவிருத்தி நிதியத்துக்கு ஜனாதிபதியினால் 1000 ரூபா வழங்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கிடையில் சகல பாடசாலைகளிலும் அபிவிருத்திச் சபைகள் அமைக்கப்பட்டு விடுமென அரசு எதிர்பார்க்கிறது.

பெற்றோரின் சார்பில் மூவரும், ஆசிரியர்களின் சார்பில் மூவரும், பழைய மாணவர்களின் சார்பில் மூவரும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பாடசாலை அபிவிருத்திச் சபைகளுக்கு தெரிவு செய்யப்படுவார்கள். குறித்த பாடசாலையின் அதிபர் சபையின் தலைவராக இருப்பார். சபையின் பதினோராவது அங்கத்தவர் பாடசாலையின் சேமநலனுக்காக உழைக்கும் ஓர் ஊழியனாக இருப்பார்.

பாடசாலை அபிவிருத்தி நிதியத்துக்கு வரிவிலக்கும் அளிக்கப்படவுள்ளது. இந் நிதியத்துக்கு வழங்கப்படும் நன்கொடைகளும் வரிவிலக்குப் பெறும்.

# ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட புலிகள் அழைப்பு

மணலாறு பலாலி போன்ற இடங்களைக் கைப்பற்றிச் சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டித் தமிழர்களின் தாயகபூமியை அழிக்க சிறிலங்கா இராணுவம் முயற்சித்துப் போரை ஆரம்பித்துள்ளது. எனவே தமிழ் மக்கள் தூரத்தில் இருந்து இதனைப் பார்த்துப் பயந்தோடி நாட்டை அந்நியனிடம் தாரைவார்க்காமல் அவனை எமது தாயக மண்ணில் இருந்து துரத்தியடிக்கத் தமிழீழப் போராட்டத்தில் உடன் வந்து சேர்ந்து தமது பங்களிப்பை வழங்குமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் சுவரொட்டிகள் மூலம் மக்களைக் கேட்டுள்ளனர்.

இத்தகைய சுவரொட்டிகள் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. (15)

## ஒரிஸாவில் புயல்

வங்காள விரிகுடாவின் மேற்கில் தோன்றிய குறைந்த காற்றழுத்த மண்டலம் புயலாக மாறி நேற்று இந்தியாவின் கிழக்கு மாநிலமான ஒரிஸாவைத் தாக்கியது. இதனால் 6 பேர் கொல்லப்பட்டனர். கடலுக்குச் சென்ற பல மீனவர்கள் காணாமற் போய்விட்டனர்.

# கனடாவில் உள்ளோரின் உறவினர் அங்கு குடியேற முன்னுரிமை!

கனடாவில் தற்பொழுது வசிப்பவர்களின் இரத்த உறவினர்கள் அங்கு சென்று குடியேற கனடா அரசு முன்னுரிமை வழங்கவுள்ளது.

இது தொடர்பான புதிய சட்ட விதிகள் அங்கு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

இந்த புதிய சட்ட விதிகளின்படி இரத்த உறவினர்கள் தவிர உண்மையான அகதிகளும், செல்வந்த முதலீட்டாளர்களும் கனடாவில் குடியேற முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

# சந்திரசேகரனை அரசியல் கைதியாகக் கருத முடியாது

## - பிரதமர் விஜயதுங்க

மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த சந்திரசேகரனை ஓர் அரசியல் கைதியாகக் கருதமுடியாது எனப் பிரதமர் டி. பி. விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இவரை ஒரு அரசியல் கைதியாகக் கருதவேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

# ஜனாதிபதி வேட்பாளராக சங்கர் தயாள்சர்மா

எதிர்வரும் இந்திய ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக சங்கர் தயாள் சர்மா வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

இவர் தற்போது உபஜனாதிபதி பதவி வகித்து வருவது தெரிந்ததே. இவருடன் இதுவரை 12 பேர் ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

சங்கர் தயாள் சர்மாவிற்கு ஏனைய கட்சியினரும் ஆதரவு அளிப்பர் எனத் தாம் நம்புவதாக காங்கிரஸ் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

இதனிடையே காங்கிரஸ் வேட்பாளருக்கான நியமனத்தில் கையொப்பம் இட பிரதமரின் அழைப்பை ஏற்று ஜெயலலிதா டில்லி சென்றுள்ளார்.

# கிளிநொச்சியில் நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் அரச அமையஎழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியலிலிருந்து 64 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள திணைக்களங்களின் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர். 06

## சங்காபிஷேகம்

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய சஹஸ்ர சங்காபிஷேகமும், பணவாளக் கோல உற்சவமும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

## மட்டுநகரில் ஒலிபரப்புச்சேவை

மட்டக்களப்பு நகரின் மத்தியிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள ஒலிபெருக்கிகளில் தினமும் மாலையில் பாடல்கள் ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன.

மட்டக்களப்பு மாநகர சபை இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளது.

இந்த ஒலிபெருக்கியில் இடைக்கிடையே 'முக்கிய' அறிவிப்புக்களும் செய்யப்படுகின்றனவாம்.

# சபையில் கேட்டவை

படையினருக்கு ஆட்சேர்க்கும் போது அவர்களின் உடலை மட்டும் பரிசோதனையிடாது தலையையும் பரிசோதனையிட வேண்டும்

... ஹட்சன் சமரசிங்க

வடக்கு கிழக்கு மாகாணங்கள் எவ் விதத்திலும் இணைக்கப்படக்கூடாது

... தினேஷ் குணவர்த்தன

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு அரசாங்கம் ஆதரவு தெரிவிக்கவில்லை

... அமைச்சர் யோசப் மைக்கல் பெரேரா

வடக்கு கிழக்கில் யுத்தம் நீடிக்கிறது அதேவேளை அரசு விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சு நடாத்துவதாக தெரிகிறது

... லக்ஸ்மன் ஜெயக்கொடி

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களை குறித்தே எல்லோரும் பேசுகிறார்கள் ஆனால் இங்கு வாழும் சிங்கள முஸ்லிம் மக்கள் குறித்து ஒன்றுமே பேசுவதில்லை

... கே பி ரத்னாயக்கா

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா விடுதலைப் புலிகளை எதிர்ப்பது அரசியல் லாபம் கருதியே அன்றி இலங்கைத் தமிழரின் நன்மை கருதி அல்ல

... உப சபாநாயகர் காமினி பொன்சேகா

## பாராளுமன்றத்தில் அடிக்கடி பிரபாகரன் பெயர்

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச்சட்டம் நீடிப்பது தொடர்பான விவாதம் நடைபெற்றபோது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயர் பல தடவைகள் இடம்பெற்றது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களும், அரச தரப்பு உறுப்பினர்களும் பிரபாகரனின் பெயரைக் குறிப்பிட்டு பேசினார்கள்.

## புலிகளை நிராயுதபாணியாக்க இராணுவ நடவடிக்கையாம்

வடக்கு கிழக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல

இவ்வாறு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார்.

விடுதலைப்புலிகளை நிராயுதபாணிகளாக்குவதே இராணுவ நடவடிக்கை எனவும் அவர் சொன்னார்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய நல்ல சூழ்நிலை தற்போது உள்ளது.

எல்லா அரசியல் கட்சிகளும் அரசியல் தீர்வுகாணப்படவேண்டும் என உணர்ந்துள்ளதால் இச்சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பது அரசின் நோக்கமாகும் எனவும் அவர் கூறினார்,

## நாடு கடத்தல் விவகாரம் நீதிமன்றமே தீர்மானிக்கும்

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என எதிர்க்கட்சியினர் கோருகின்றனர்

ஆனால் அதனை மேல் நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும்

இவ்வாறு சட்ட சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சர் ரிரோன் பெர்னான்டோ சபையில் நேற்றுக் கூறினார்

ஒரு குற்றவாளியை நாடு கடத்த இலங்கை மேல் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தி சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்

## சித்தாண்டியில் ஹெலிகப்டர் தாக்குதல்

அம்பாறையில் நேற்று பதுளைச்சந்தி, சித்தாண்டிப்பகுதிகளில் மோதல்கள் இடம்பெற்றதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

சித்தாண்டியில் படையினருக்கு உதவியளிக்க ஹெலிகப்டர் ஒன்றும் அனுப்பப்பட்டதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

## மத்திய வங்கி புதிய ஆளுநர் எச். பி. திசாநாயக

இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த எச் பி திசாநாயக எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார் இவர் அரச அதிபராகவும் சுங்கப் பணிப்பாளராகவும் கடமையாற்றியவர், நிதியமைச்சின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதி இந்த நியமனத்தைச் செய்துள்ளார்.

இதுவரை இப்பதவியை வகித்து வந்த எச் என். எஸ். கருணாதிலக ஜூன் மாதத்திலிருந்து ஓய்வு பெறுகிறார். இவருக்கெதிராக கணக்காய்வாளர் நாயகம் பல குற்றச்சாட்டுகளை வெளியிட்டிருந்ததைத் தொடர்ந்து இவ்விவகாரம் பாராளுமன்றத்தில் பிரச்சினையாக எழுப்பப்பட்டதும் பிரதமர் இவரை ஆதரித்து அறிக்கை விடுத்தார்.

இந்த விவகாரம் பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டுமென எதிர்க்கட்சியினர் வலியுறுத்தி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் ஜட்கா கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 19-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# தமிழமுனை இயற்கைக் குன்றை கைப்பற்ற படையினர் முயன்றனர்

மணலாறு தமிழமுனையில் உள்ள ஓர் உயரமான இயற்கைக் குன்று ஒன்றை கைப்பற்றவே கடந்தவாரம் இராணுவத்தினர் குமுழமுனை நோக்கி முன்னேற பல தடவைகள் முயற்சித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

குமுழமுனையில் உள்ள கொட்டகை கிணற்றுப் பிள்ளையார் கோயில் குன்று என அழைக்கப்படும் இக்குன்றை கைப்பற்றுவதன் மூலம் அதன் உச்சியில் பாரிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்து மணலாற்றின் பல பகுதிகளையும் தமது ஒரே பார்வையின் கீழ் வைத்திருக்க படையினர் திட்டமிட்டிருந்தனர்.

முன்னர் இந்தக் குன்றின் மேல் இந்திய இராணுவம் முகாம் ஒன்றை அமைத்திருந்தது இதிலிருந்து மணலாறு மீது அவர்கள் பரவலாக ஷெல், துப்பாக்கிச் சூடுகளை நடத்திவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் ஸ்ரீலங்கா இராணுவம் இக்குன்றை பிடிக்க எடுத்த இராணுவ நடவடிக்கை புலிகளின் கடும் தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டுவிட்டமை தெரிந்ததே.

## கூட்டுறவுச் சங்கங்களில் போதியளவு பொருள்கள்

கூட்டுறவுச் சங்கங்களில் ஆறு மாத காலத்துக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனி, மா, அரிசி, பருப்பு என்பன களஞ்சியங்களில் தாராளமாக இருப்பதாகவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்க செயலக புனர்வாழ்வுப் பிரிவு எப்போதும் தயாராக இருப்பதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இதேபோல தனியார் வியாபாரிகளிடமும் போதியளவு உணவுப்பொருள் இருப்பதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (47, 07)

## சேந்தாங்குளம் வீதியை திறப்பது குறித்து பேச்சுகள்

சேந்தாங்குளம், கீரிமலை, இளவாலை வீதியூடாக மீண்டும் உணவு லொறிகள் செல்வது தொடர்பாக கொழும்பில் சர்வதேச செஞ்சிலுவைக்குழு அதிகாரிகளுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இரு வாரங்களுக்கு முன்பு இவ்வீதியூடாகச் சென்ற லொறிகளை படையினர் வரவேண்டாம் எனக் கூறியதை அடுத்து காங்கேசன்துறை களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுவது தடைப்பட்டது தெரிந்ததே,

அத்துடன் கடந்தவாரம் சேந்தாங்குளம் பகுதியில் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது (47)

## பாட்டாளி மக்கள் கட்சிக்கு கிடைத்த வெற்றி - பண்ருட்டி

விவசாயிகளுக்கு எதிரான வரிகளை தமிழக அரசு நீக்கியமை பாட்டாளி மக்கள் கட்சியினர் நடத்திய போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என பண்ருட்டி இராமச்சந்திரன் நேற்றுத் தெரிவித்தார்.

கைதான கட்சியின் தலைவர் ராமதாஸையும் ஆயிரக்கணக்கான தொண்டர்களையும் விடுவிக்குமாறு அவர் ஜெயலலிதாவை கோரியுள்ளார்

### தீவுப்பகுதிக்கு சென்றனர்

நயினாதீவு, காரைநகர், புங்குடுதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளிலிருந்து சிகிச்சை பெற யாழ்ப்பாணம் வந்த முப்பது பொதுமக்கள் நேற்று குமணகப்பலில் தீவுப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரின் உதவியுடன் செல்லும் இவர்களை இறக்கிவிட்டு தீவுப்பகுதிகளில் தற்போது நோய்வாய்ப்பட்டுள்ள பொதுமக்களை குமண கப்பல் பருத்தித்துறைக்கு ஏற்றிக்கொண்டு வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தீவுப்பகுதிகளுக்கான தபால் பொதிகளும் இக்கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன (47 15, 19)

### அவசரகாலச்சட்டம் நிறைவேறியது

அவசரகாலச் சட்டம் நேற்று 64 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது 119 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 55 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

### விழிசிட்டியில் ...

அழைப்பதாக நினைத்து வீட்டினுள் புகுந்து விட்டார். பின் உறவினர்கள் வீட்டினுள் சென்று தங்களை அறிமுகப்படுத்தி அழைத்து வந்தனர். (22)

### விவசாயிகள் மின் கட்டணம்; ஜெயலலிதா கைவிட்டார்

தமிழகத்தில் விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரத்திற்கான மின் கட்டண அறவீட்டுச் சட்டத்தை வாபஸ் பெறுவதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று தெரிவித்தார்

விவசாயிகள் சங்கங்களுடனான நேற்றைய சந்திப்பின் போதே அவர் இதை அறிவித்தார்

தமிழக அரசின் இந்த அறிவிப்பை கண்டித்து தமிழகத்தில் அ தி மு.க வைத்தவிர்ந்த அனைத்துக் கட்சிகளும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தியமை தெரிந்ததே

### வர்த்தகர்களுக்கு புலிகள் எச்சரிக்கை

குருநகர் பகுதியில் உள்ள பலசரக்கு கடை வியாபாரிகளிடம் பொருள்களை நிர்ணய விலையில் விற்பனை செய்யுமாறு ஒவ்வொரு கடைகடையாக சென்று விடுதலைப் புலிகள் நேற்று வேண்டுகோள் விடுத்தனர்.

அதிகம் விலையில் விற்றால் தண்டனை வழங்கப்படும் எனவும் அவர்கள் எச்சரிக்கை செய்தனர்.

அத்துடன் பொருள்களை பதுக்கவேண்டாம் என்றும் வர்த்தகர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

கட்டுப்பாட்டு விலைக்கு 15

## வீழ்ந்த மரக்கொப்பு பட்டபாடு!

நேற்றுக்காலை மண்டைதீவு ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் யாழ் நகரை நோக்கி ஏவப்பட்ட ஷெல்களில் ஒன்று யாழ் கொட்டடி மையவாடியில் நின்ற மருதமரத்தை தாக்கி வெடித்ததினால் அந்த மரத்தின் பாரிய கொப்பு ஒன்று முறிந்து விழுந்தது. அவ்வாறு முறிந்த மரக்கொப்புக்களை வெட்டி எடுப்பதற்காக பலர் போட்டி போட்டு வெட்டி எடுத்ததையும் மூலம் போனவர்கள் என்ற அடிப்படையில் மரத்தைத்துண்டு போட்டு தறித்தெடுத்ததைக் காணக் கூடியதாக இருந்தது. 19